


10.06.2024 - 1.45 ீஆ

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி விவசாயிகள் வாழ்வாதாரத்திற்கான வேளாண் நிதி திட்டத்தின் கீழ் 20 ஆயிரம் கோடி ரூபாயை விடுவித்து இன்று ஆணை பிறப்பித்துள்ளார்.

2. விக்ரவாண்டி தொகுதி உட்பட 7 மாநிலங்களில் காலியாக உள்ள 13 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்தமாதம் 10-ம் தேதி இடைத்தேர்தல் அறிவிக்கப் பட்டுள்ளது.

3. தமிழ்நாட்டில் பள்ளிகள் திறக்கப்பட்ட நிலையில் நடப்பு கல்வியாண்டு சிறப்பாக அமைய முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

4. திருச்சி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் விரைவில் செயல்பாட்டிற்கு வரும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு கூறியுள்ளார்.

5. இத்தாலி லோனாட்டோவில் சர்வதேச துப்பாக்கி சுடும் போட்டிகள் இன்று தொடங்குகின்றன.

இனி விரிவான செய்திகள்

□□□□□□□□

பிரதமர் கிசான் சம்மான்

பிரதமர் திரு.நரேந்திரமோடி விவசாயிகள் வாழ்வாதாரத்திற்கான கிசான் சம்மான் நிதி திட்டத்தின் கீழ், 17-வது தவணைத் தொகையான 20 ஆயிரம் கோடி ரூபாயை இன்று விடுவித்து கையெழுத்திட்டுள்ளார்.

புதுதில்லியில் பிரதமர் அலுவலகத்தில் 3-வது முறையாக பிரதமர் பொறுப்பை இன்று ஏற்றுக் கொண்ட அவர், விவசாய நலத்திற்காக கோப்பில் முதலாவதாக கையொப்பம் இட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

இதன்மூலம் 9 கோடியே 30 லட்சம் விவாசயிகள் பயனடைவார்கள்.

பின்னர் பேசிய பிரதமர், விவசாயிகளின் வாழ்வாதார மேம்பாட்டில், புதிய மத்திய அரசின் அர்ப்பணிப்பை வெளிக்காட்டும் வகையில் முதலாவதாக இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டார்.

மத்திய அரசு விவசாயிகளின் நலத்தில் மிகவும் உறுதியாக உள்ளதாக பிரதமர் எடுத்துரைத்தார்.

வருங்காலங்களில் விவசாயிகள் மற்றும் வேளாண் துறை வளர்ச்சிக்காக தமது அரசு முனைப்புடன் செயலாற்றும் என்றும் அவர் கூறினார்.

2019-ம் ஆண்டு தொடங்கப்பட்ட விவசாயிகளுக்கு வருவாயை உறுதி செய்யும் கிசான் சம்மான் நிதி திட்டத்தின் கீழ் தகுதியுள்ள விவசாயிகளின் குடும்பங்கள் பயன்பெறும் வகையில்
4 மாதங்களுக்கு ஒருமுறை 3 தவணைகளாக 2 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் ஆண்டு ஒன்றுக்கு 6 ஆயிரம் ரூபாய் செலுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 11 கோடிக்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்களுக்கு இதுவரை 3 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் வழங்கப்பட்டுள்ளது.

□□□□□

மத்திய அமைச்சரவை கூட்டம்

பிரதமர் திரு. நரேந்திரமோடி தலைமையில் புதிய மத்திய அமைச்சர்களின் முதல் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இந்நிலையில் மத்திய அமைச்சர்களின் இலாக்கா பொறுப்புகள் இதில் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

□□□□□

தேர்தல் ஆணையம்

நாடுமுழுவதும் 7 மாநிலங்களில் காலியாக உள்ள 13 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு தேர்தல் ஆணையம் அடுத்தமாதம் 10-ம் தேதி இடைத்தேர்தலை அறிவித்துள்ளது.

இதன்படி தமிழகத்தில் விக்ரவாண்டி சட்டப்பேரவை தொகுதியிலும்,

பஞ்சாப், மத்திய பிரதேசம், பீஹாரில் தலா ஒரு தொகுதியிலும்,

உத்தரகாண்டில் 2 தொகுதிகளிலும்,

ஹிமாச்சல பிரதேசத்தில் மூன்றிலும்,

மேற்கு வங்கத்தில் 4 தொகுதிகளிலும் இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

இதற்கான வேட்புமனு தாக்கல் வரும் 14-ம் தேதி தொடங்குகிறது.

மனுக்களை தாக்கல் செய்ய வரும் 21-ம் தேதிவரை காலஅவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

வேட்புமனுக்கள் வரும் 24ம் தேதி பரிசிலிக்கப்படுகின்றன.

அவற்றை திரும்பப்பெற 26-ம் தேதி கடைசி நாளாகும்.

இடைத்தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை அடுத்தமாதம் 13-ம் தேதி நடைபெறும்.

விக்ரவாண்டியில் திமுக உறுப்பினர் புகழேந்தி உடநலக் குறைவால் காலமானதால் இத்தொகுதிக்கு இடைத்தேர்தல் நடைபெறுகிறது.

இடைத்தேர்தல் அறிவிப்பை தொடர்ந்து விழுப்புரம் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்துள்ளன

□□□□□

சிக்கிம்

சிக்கிம் மாநில முதலமைச்சராக 2-வது முறையாக திரு. பிரேம் சிங் தமாங் இன்றுமாலை பதவி ஏற்கிறார்

தலைநகர் கேங்டாக்கில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஆளுநர் திரு.லக்ஷ்மன் பிரசாத் ஆச்சார்யா அவருக்கு பதவி பிரமாணம் செய்துவைக்கிறார்.

சிக்கிம் சட்டப்பேரவை தேர்தலில் மொத்தமுள்ள 32 இடங்களில் சிக்கிம் கிராந்திகாரி மோர்சா 31 இடங்களில் வெற்றிபெற்று அறுதி பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைக்கிறது.

ஒடிஷாவில் பி.ஜே.பி. அறுதி பெரும்பான்மையுடன் வெற்றிபெற்று நாளை மறுநாள் புதிய அரசு பதவி ஏற்க உள்ள நிலையில் இதுவரை புதிய முதலமைச்சரின் பெயர் முடிவாகவில்லை.

புதிய சட்டப்பேரவை தலைவரை தேர்ந்தெடுப்பதற்காக மத்திய அமைச்சர்கள் திரு. ராஜ்நாத் சிங் மற்றும் திரு. பூபேந்தர் யாதவ் ஆகியோர் மத்திய பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நாளை மத்திய பார்வையாளர்கள் முன்பு பி.ஜே.பி சட்டப்பேரவை கட்சிக் கூட்டத்தில் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பி.ஜே.பி சட்டப்பேரவை உறுப்பினர் திரு. சுரேஷ் புஜாரியின் பெயர் முதலமைச்சர் பரிசீலனையில் இருப்பதாக கூறப்படுகிறது.

□□□□□

பங்குச்சந்தை

பங்குச்சந்தை சென்செக்ஸ் குறியீடு இதுவரை இல்லாத அளவாக 77 ஆயிரம் புள்ளிகளை தாண்டியுள்ளது.

நாட்டின் வளர்ச்சி விகிதம் நடப்பு நிதியாண்டில் 7.2 சதவிகிதமாக அதிகரிக்கும் என்ற ரிசர்வ் வங்கியின் கணிப்பு மற்றும் புதிய வெளிநாட்டு நிதி பரிவர்த்தனைகளே இதற்கு காரணம்.

தேசிய பங்குச்சந்தை நி∴ப்டியும் 122 புள்ளிகள் உயர்ந்து 22 ஆயிரத்து 412 ஆக அதிகரித்துள்ளது.

□□□□□

முதலமைச்சர் வாழ்த்து

தமிழ்நாட்டில் கோடை விடுமுறைக்கு பின்னர் இன்று பள்ளிகள் திறக்கப்பட்டன

புதிய கல்வியாண்டு மாணாக்கருக்கு இனிதாக அமைய முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் மாணாக்கருக்கு புத்தகங்கள் இன்று வழங்கப்பட்டன

சேலத்தை சேர்ந்த பள்ளி மாணவிகள் தங்கள் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்கையில்

.. வாய்ஸ் ..

□□□□□

எஸ்.எஸ். சிவசங்கர்

பெரம்பலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் இன்று நடைபெற்ற அரசு விழாவில் மாணாக்கருக்கு விலையில்லா புத்தகங்களை வழங்கியதோடு,

ஆதார் பதிவு புகைப்படம் எடுக்கும் நிகழ்ச்சியை மாநில போக்குவரத்து துறை அமைச்சர்
திரு. ளு.ளு. சிவசங்கர் இன்று துவக்கிவைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசியஅவர், மாவட்டத்தில் 34 ஆயிரத்து 659 மாணாக்கருக்கு இப்புத்தகங்கள் வழங்கப்படுவதாக கூறினார்.

புதிய அரசு பேருந்துகளில் தானியங்கி கதவுகள் உள்ளதாகவும், பழைய பேருந்துகளில் இக்கதவுகள் பொருத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மாணவ மாணவிகள் பழைய இலவச பேருந்து பயண அட்டை தற்போது பயன்படுத்திக் கொள்ளலாம் என தெரிவித்தார்.

சென்னையில் பேருந்து நிறுத்தங்களில் பேருந்தின் வருகையை முன் கூட்டியே அறிவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு எள்ளதாகவும், 3 ஆயிரம் பேருந்துகளில் ஜி.பி.எஸ். கருவிகள் பொருத்தப்பட்டு இந்நடவடிக்கை கண்காணிக்கப் படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அரியலூர் அரசு பெண்கள் உயர்நிலை பள்ளியிலும் ஆதார் அட்டை பதிவு முகாமை அமைச்சர் துவக்கிவைத்து மாணாக்கருக்கு புத்தகங்களை வழங்கினார்.

□□□□□

கே.ஆர் பெரியகருப்பன்

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் விலையில்லா பாடபுத்தகங்களை மாணவிகளுக்கு மாநில கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே.ஆர் பெரிய கருப்பன் இன்று வழங்கினார்.

தொடர்ந்து ஆதார் அட்டை வழங்குவதற்கான சிறப்பு முகாமையும் அவர் தொடங்கி வைத்தார்.

காளையார் கோவிலில் சுதந்திர போராட்ட வீரர் வாளுக்கு வேலி அம்பலத்தின் பிறந்தநாளையொட்டி அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

□□□□□

நேரு

திருச்சி பஞ்சப்பூர் ஒருங்கிணைந்த பேருந்து நிலைய கட்டுமானப் பணிகள் வரும் ஆகஸ்ட் 15-ம் தேதிக்குள் முடிக்கப்பட்டு செயல்பாட்டிற்கு கொண்டுவர நடவடிக்கைகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்படுவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இப்பேருந்து நிலைய கட்டுமான பணிகளை இன்று ஆய்வுசெய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

.. வாய்ஸ் ..

திருச்சி சர்வதேச விமான நிலையத்தின் புதிய முனையத்தை பார்வையிட்ட அவர், முக்கிய பிரமுகர்களுக்கு தனி வழி ஏற்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னதாக திருச்சி மண்ணச்சநல்லூர் திருவாசி கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி முகாமை தொடங்கிவைத்தார்.

பீமநகர் மாநகராட்சி அரசு நடுநிலைப்பள்ளியில் மாணாக்கருக்கான ஆதார் அட்டை பதிவு முகாமையும் திரு. கே.என். நேரு துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் ஆட்சித்தலைவர் திரு. மா.பிரதீப்குமார் உடனிருந்தார்.

□□□□□

எ.வ. வேலு

திருவண்ணாமலையில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான புதிய பேருந்து நிலையம் விரிவாக்கம் செய்யப்படும் என்று மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ. வேலு தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் இன்று புதிய பேருந்து கட்டுமானப் பணிகளை ஆய்வு செய்த அவர், கிரிவல பாதையில் தரம்வாய்ந்த ஓய்வறைகள் 5 இடங்களில் கட்டப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

சாத்தனூர் அணையிலிருந்து 56 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் திருவண்ணாமலைக்கு தண்ணீர் கொண்டுவரப்பட இருப்பதாகவும் தெரிவித்தார்.

□□□□□

ஜோதி நிர்மலா சாமி

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் திருமதி. ஜோதி நிர்மலா சாமி, திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ளாட்சி தேர்தல் தொடர்பான ஆலோசனைகளை இன்று மேற்கொண்டார்.

தமிழ்நாட்டில் 27 மாவட்டங்களுக்கான உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம் வரும் டிசம்பர் மாதம் நிறைவடைய உள்ள நிலையில், எஞ்சிய 9 மாவட்ட உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத்தை கலைத்து ஒரே கட்டமாக ஊரக உள்ளாட்சி தேர்தல் நடத்துவது குறித்து மாநில அரசு ஆலோசித்து வரும் நிலையில் இந்த ஆலோசனை கூட்டம் முக்கியத்துவம் பெறுகிறது.

□□□□□

மாணாக்கர் சேர்க்கை

தமிழ்நாட்டில் பொறியியல் மாணாக்கர் சேர்க்கை விண்ணப் பதிவிற்கான காலஅவகாசம் நாளை வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுவரை விண்ணப்பிக்க தவறிய மாணவர்கள் வநெய ழடெைநெ.ழசப என்ற இணையதளம் வாயிலாக பதிவு செய்து பதிவு கட்டணம் செலுத்தி சான்றிதழ்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம் என்று தொழில்நுட்ப கல்வி இயக்ககம் அறிவித்துள்ளது.

கடந்த 6-ம் தேதி வரை நடைபெற்ற விண்ணப்ப பதிவில் 2 லட்சத்து 49 ஆயிரத்து 918 மாணாக்கர் விண்ணப் பதிவு செய்துள்ளனர்.

2 லட்சத்து 6 ஆயிரத்து 12 மாணாக்கர் விண்ணப்ப கட்டணங்களை செலுத்தி உள்ளனர்.

□□□□□

திற்பரப்பு அருவி

கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதையடுத்து சுற்றுலா பயணிகள் குளிக்க தடைவிதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

□□□□□

வானிலை

வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழ்நாட்டில் இன்று தொடங்கி 7 நாட்களுக்கு பரவலாக லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

ஒருசில இடங்களில் வெப்பநிலை 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும் என்றும் தெரிவிக்கப்படுகிறது

மன்னார் வளைகுடா, குமரிக்கடல், தென்தமிழக கடலோரம், தென்மேற்கு மத்திய வங்ககடல் பகுதிகளில் பலத்த சூறாவளி காற்று வீசக்கூடும் என்பதால் வரும் 14-ம் தேதிவரை இதற்குட்பட்ட பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் படுகின்றனர்.

□□□□□

துப்பாக்கி சுடுதல்

இத்தாலி லோனாட்டோவில் சர்வதேச துப்பாக்கி சுடும் போட்டிகள் இன்று தொடங்குகிறது

வரும் 19-ம் தேதிவரை இப்போட்டிகள் நடைபெற உள்ளன.

மைராஜ் அஹமத் கான், அனந்த் ஜீத்சிங், நருக்கா, ரைஸா திலான் உள்ளிட்ட 18 வீரர்கள் களத்தில் உள்ளனர்.

□□□□□

டென்னிஸ்

ர்நடைடிசழடெ சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை இந்தியாவின் சுமித் நாகல் கைப்பற்றியுள்ளார்.

□□□□□

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது